# மாத்தளை பிரதேச சபை

# மாத்தளை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------------

தலைவருக்கு அனுப்பப்பட்ட எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாத்தளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

--------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) 10 கட்டட விடயங்களின் பெறுமதியினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 430,000 பெறுமதியின் ஆலுமாரி ஒன்று கொள்வனவு செய்வதற்காக செலுத்தியிருந்த முற்பணம் ரூபா 100,000 தொகையினை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ)(i) நிவ்சிடி எல்லேபொல எஸ்டேட் காணியின் பெறுமதி ரூபா 100,000 இற்கான 15 பர்சஸ்கள் மற்றும் 04 ஏக்கர் 03 ரூட் 16 பர்சஸ் அளவான காணித் துண்டுகள் 8 இன் பெறுமதியினைக் கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ii) ரூபா 60,000 பெறுமதியான அடம்பேகஹயாய காணியின் 07 பர்சஸ் 2008 ஆண்டின் போது நன்கொடை உறுதி ஒன்றின் மூலம் உரித்தாக்கப்பட்டிருந்த போதும், அதன்

பெறுமதியின் கணக்கீடுகளில் இருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 2,384,399 இற்காக கடன் கொடுத்தோர் மீதி மற்றும் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 10,385 இற்கான பங்களிப்பு தொகை கணக்குகளில் இருந்து விடுபட்டுள்ளது.

(உ) நீர் பவுஸர் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டியிருந்த ரூபா 348,625 இற்கான வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 31,014,876 ஆக காணப்பட்டதுடன், அதில் ஒரு வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 15,698,874 மீதியும் அடங்கியுள்ளது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலவு கடன்கொடுத்தோர் மீதி ரூபா 25,113,989 ஆக காணப்பட்டதுடன், அதில் ஒரு வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 10,661,650 மீதியும் அடங்கியுள்ளது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 34,552,978 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதுள்ளது.

1.3.5 சட்டங்கள் விதிகள் பிரமாணங்களும் இணக்கமின்மை

----------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு் இனக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 | குறிப்பிட்ட ஏற்பாடுகளின் மூலம் வசதிகள் ஏற்படுத்தியிருக்காத கருமங்களுக்காக மீளாய்வாண்டின் போது 25 சந்தர்ப்பங்களில் ரூபா 162,929 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை பிரமாணம் 371(2) | முன்னைய ஆண்டுகளின் போது வழங்கியிருந்த முற்பணங்களில் இருந்து ரூபா 310,367 இற்கான மீதியொன்று தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) மத்திய மாகாண சபை உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம்

--------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2013 மார்ச் 23 திகதிய இலக்கம் 3.'.2.'.2.'.4 இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை மிகைத்து மாதாந்தம் ரூபா 1,000 வீதம் தொலைபேசி செலவு கொடுப்பனவு செய்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது 10 மாத காலத்திற்காக ரூபா 150,000 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 2013 ஏப்ரல் 05 திகதிய 01.'.2013 இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் | நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் சமர்பிக்கப்படாத 15 மந்திரிமார்களுக்கு எரிபொருள் படி ரூபா 212,500 செலுத்தப்பட்டிருந்தது. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,241,697 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,312,198 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,070,501 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வருமானத்தை சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------------

செயற்பாடு நிலையில் காணப்பட்ட 16 நீர் செயற்திட்டங்களில் 02 இனது வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் முறையே நூற்றிற்கு 10 மற்றும் நூற்றிற்கு 55 மட்டத்தில் காணப்பட்டது. அத்துடன், மேலும் 13 செயற்திட்டங்களில் நிலுவை வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் நூற்றிற்கு 0 முதல் நூற்றிற்கு 69 வீச்சில் காணப்பட்டது.

2.2.2 வீதவரி

----------

மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்டவைகளில் ரூபா 220,554 உம் மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக நிலுவை வீதவரிகளில் ரூபா 94,467 ஆக கூட்டுத்தொகை ரூபா 315,021 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.3 ஏனைய வருமானங்கள்

---------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தரை வாடகை மற்றும் கடைகள் நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டு கட்டணம் ஆக கூட்டுத்தொகை ரூபா 1,875,000 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபை பிரதான செயாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 653,501 உம் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,205,076 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்பு

---

முன்னைய ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்ள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,737,060 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயற்பாட்டு திறமையின்மை

---

(அ) முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த கட்டட விண்ணப்பங்களின் 700 இற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது எனினும் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 21 இன் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் வழங்கியிருந்தது 63 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே.

(ஆ) ஓய்வுபெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 10 அலுவலர்களிடம் ரூபா 119,192 இற்கான கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) முறைசார் வீதமாக கூறுவிலைகள் கோறப்படாமல் வாடகைக்குப் பெற்றிருந்த 02 வாகனங்களுக்காக ரூபா 335,000 வாடகை செலுத்தப்பட்டுள்ளது.

(ஈ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 206 வர்த்தக நிலையங்களை இனங்கண்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதும் அவற்றில் 79 வர்த்தக நிலையங்களுக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மீதியாகவுள்ள 127 வர்த்தக

நிலையங்களும் அனுமதிப்பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

3.2 பயன்படுத்தப்படாத ∴ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

---

ரூபா 33,500 கிரயத்தையுடைய ஒலிபெருக்கி தொகுதி ஒன்றும் பெறுமதி கணக்கிட முடியாத 15 பண்ட விடயங்களும் பயன்படுத்தப்படாமலும் குறைபயன்பாட்டுடனும் காணப்பட்டது.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

1993 இன் 18 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்பு தொகை செலுத்தாமையால் கடந்த 03 வருடங்கள் தொடர்பாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 10,388 மிகை விதிப்பு தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

மகநெகும ஏற்பாடுகளின் கீழ் 03 பாதைகளுக்கு கொங்கிரீட் அச்சு கற்கள் பதித்து அபிவிருந்தி செய்யும் நிர்மாண வேலைகள் 03 தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | நிர்மாண வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | பீரிதேவொல குடியேற்றத்திற்கு நுழை பாதை - முதலாம் கட்டம் | 500,000 | பாதையில் 17 மீற்றர் நீளமான பகுதியொன்றிற்கு கொங்கிரீட் அச்சு கற்கள் குழிவு ஏற்பட்டுள்ளதுடன் அதற்காக ரூபா 45,860 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது. |
| (ii) | அழுவிஹாரே சேருகல நுழை பாதை | 500,000 | 237.86 இற்கான சதுர மீற்றர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் சதுர மீற்றர் 243.01 இற்கு கொடுப்பனவு செய்துள்ளமையால் ரூபா 14,090 மேலதிக கொடுப்பனவு நடைபெற்றுள்ளது. |
| (iii) | அழுவிஹாரே பிவிதுரு மாவத்தை இரண்டாம் குறுக்குத் தெரு முதலாம் கட்டம் | 500,000 | 239 சதுர மீற்றர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் 243 சதுர மீற்றர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 8,228 இற்கான மேலதிக கொடுப்பனவு நடைபெற்றுள்ளது. |

3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------

சபையின் சேதனப் பசளை முற்றித்தில் நாளாந்தம் சேதனப் பசளை 20 கி.கி. ற்கும் 25 கி.கி. இற்கும் இடைப்பட்ட அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அத்துடன் 01 கி.கி. ரூபா 10 விற்கு விற்பனை செய்த போதும் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

--------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பாதீட்டின் மூலம் 37 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 8,276,000 இற்கான ஏற்பாடுகளில் எதுவித செலவும் மேற்கொள்ளப்படாமல் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்படல் மற்றும் சேமித்தல் நடைபெற்றுள்ளது. 02 வருமான விடயங்களில் பாதீடு செய்யப்பட்டுள்ள ரூபா 350,000 வருமானங்களில் வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. அத்துடன் மேலும் 08 வருமான விடயங்கள் வருமானம் உழைத்தலில் சதவீதம் நூற்றிற்கு 02 முதல் நூற்றிற்கு 30 வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாடு கருவி ஒன்றாக பயன்படுதகப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலுவை வருமான அறவிடப்படல்

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) நிதி கட்டுபாடு